## 23. துன்ப நேரத்தில் எனக்கு

### பல்லவி

துன்ப நேரத்தில் எனக்கு இன்பமானீரே
துயர வேலையில் எனக்கு ஆனந்தமானீரே

### அனுபல்லவி

*உம்மை துதிக்க துதிக்க*
*துன்பமெல்லாம் நீங்குதே*
*உம்மை துதிக்க துதிக்க*
*துயரமெல்லாம் மாறுதே*

### சரணங்கள்

1. ஆகாரின் கண்ணீரை கண்ட தேவனே
வனாந்திரத்திலே தண்ணீரை தந்தீரே
- துன்ப நேரத்தில்

2. எகிப்தில் அடிமைதனத்தை கண்டதேவனே
பார்வோன் கரத்திலிருந்து விடுதலை தந்தீர்
- துன்ப நேரத்தில்

3. தானியேலை சிங்க கெபியில் கண்ட தேவனே
சிங்கத்தின் வாயை கட்டி விடுதலை தந்தீர்
- துன்ப நேரத்தில்

4. சபையார் ஊக்க ஜெபத்தை கண்ட தேவனே
சிறையில் பேதுருவுக்கு விடுதலை தந்தீர்
- துன்ப நேரத்தில்

5. பவுலும் சீலாவை சிறையில் கண்டீர்
சிறையின் கட்டிலிருந்து விடுதலை தந்தீர்
- துன்ப நேரத்தில்